# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 173/மா/2023**

**நாள்: 08.07.2023**

திருவாளர்கள். D. சிங்காரவேல் மற்றும் D. மனோகர்ராஜ்,
மதுரை – 625 002. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, சின்ன சொக்கிகுளம், கமலா 2வது தெரு, 21-Aல் வசிக்கும் திருவாளர்கள் D. சிங்காரவேல் மற்றும் D. மனோகர்ராஜ் ஆகியோரின் 20.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.02.2023–ல் பெறப்பட்டு 173/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, சின்ன சொக்கிகுளம், கமலா 2வது தெரு, 21-Aல் வசிக்கும் திருவாளர்கள் D. சிங்காரவேல் மற்றும் D. மனோகர்ராஜ் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 20.02.2023 நாளிட்ட தங்களது மனுவில் :

1. We had filed an Appeal dated 20.02.2023 regarding drinking water supply to our premises of 21-A, Kamala IInd Street, Chinna Chokkikulam, Madurai – 625 002 which was cut off when road repair works were done several months back by Madurai Corporation.

2. Inspite of repeated reminders sent to concerned Authorities , drinking water supply is not restored inspite of regular payment of Water Tax.

3. Pray directions to ensure water supply as requested in our Appeal dated 20.02.2023 filed with you since amount spent for purchase of water daily at the above mentioned premises due to non supply of water by Madurai Corporation.

**2. மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்முறைமன்ற கடித நாள் 7.3.2023 மூலமாக இம்மனு மீதான அறிக்கை கோரப்பட்டது.**

**மதுரை மாநகராட்சி உதவி ஆணையர்(பொ) தனது 19.6.2023 நாளிட்ட கடிதத்தில் :**

"உதவிப் பொறியாளரின் குறிப்பின்படி மதுரை மாநகராட்சி, மண்டலம் – 2 (வடக்கு) வார்டு.32ல் உள்ள குடியிருப்பு வீட்டிற்கு தற்பொழுது உள்ள கட்டிடம் வணிக உபயோகமாக உள்ளது. ஆனால் குடிநீர் வரியானது குடியிருப்பு வரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 28.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரரின் சார்பில் திரு. பொன் முருகேச பாண்டியன் என்பவர் மனுதாரர்களின் ஒப்புதல் கடிதத்துடன் 28.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாவட்டம், சின்ன சொக்கி குளம், கமலா இரண்டாவது தெரு, எண்.21–A ல் அமைந்துள்ள மனுதாரர்களின் வீட்டிற்கு முறையாக குடிநீர் இணைப்பு பெறப்பட்டிருந்தது (குடிநீர் இணைப்பு வரி விதிப்பு எண்.115/042/00060), சில மாதங்களுக்கு முன்பு மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டிருந்த சாலை பழுது பார்க்கும் பணிகளின்போது மேற்கண்ட வீட்டிற்கான குடிநீர் இணைப்பில் உடைப்பு ஏற்பட்டு இன்று வரை அவை சரி செய்யப்படாமல் உள்ளது. இது குறித்து மதுரை மாநகராட்சிக்கு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நினைவூட்டுகள் பல அனுப்பப்பட்டும் மதுரை மாநகராட்சியால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேற்கண்ட குடிநீர் இணைப்பிற்காக ஒரு வருட காலத்திற்கு ரூபாய் 900/– வீதம் குடிநீர் கட்டடணம் முறையாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட மனுவின் மீது விரைவாக நடவடிக்கை எடுத்து, வயது முதிர்ந்த மேற்கண்ட மனுதாரர்களின் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

**4. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவிப் பொறியாளர் 28.06.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர்கள் திரு D. சிங்காரவேல் மற்றும் D. மனோகர் ராஜ் ஆகியோர் முறைப்படி குடிநீர் இணைப்பு பெற்றுள்ளனர். தற்போது மனுதாரர்கள் வசிக்கும் பகுதியில், சாலை சீர் செய்யும் பணிகளும், பாலம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருவதால் அங்குள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு அப்பகுதியில் சீராக தண்ணீர் வழங்க இயலவில்லை. எனவே, மனுதாரரின் வீட்டை நேரடியாக ஆய்வு செய்து, அவர்களது வீட்டில் ஏற்பட்டுள்ள குடிநீர் இணைப்பு உடைப்பினை இன்னும் 15 நாட்களில் சரிசெய்து அவர்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மதுரை மாநகராட்சி ஆணையரிடமிருந்தோ அல்லது உதவி ஆணையரிடமிருந்தோ இந்நேர்வு தொடர்பாக அறிக்கை ஏதும் பெறப்பட்டு, இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளனர்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர்கள் சிங்கார வேலு மற்றும் D. மனோகர் ராஜ் ஆகியோர் தங்களுடைய வீட்டிற்கு முறையாக குடிநீர் இணைப்பு பெறப்பட்டிருந்தும் சாலை பழுதுபார்த்தபோது இணைப்பு உடைக்கப்பட்டு ஒரு வருடமாக சரி செய்யாமலும் தங்களது புகார் மனுவின் மீது மதுரை மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தாங்கள் குடிநீர் இணைப்பிற்கான ஒரு வருட காலத்திற்கு ரூ.900/- வீதம் குடிநீர் கட்டணமாக மதுரை மாநகராட்சிக்கு செலுத்தி வருவதாகவும் எனவே தங்களது வீட்டிற்கு குடிநீர் இணைப்பை மீண்டும் வழங்க உத்திரவிட கோரியுள்ளனர்.

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மனுதாரர்கள் வசிக்கும் பகுதியில் சாலை சீர் செய்யும் பணிகளும், பாலம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருவதால் மதுரை மாநகராட்சியால் அப்பகுதியில் சீரான குடிநீர் வழங்கமுடியவில்லை எனவும், மனுதாரரின் வீட்டை ஆய்வு செய்து 15 நாட்களில் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கு அவசியமான மற்றும் அத்தியாவசியமான அடிப்படை தேவையான சீரான சுத்தமான குடிநீர் வழங்க வேண்டியது மதுரை மாநகராட்சியின் கடமையாகும். மனுதாரர் வீட்டிற்கு ஏற்கெனவே குடிநீர் இணைப்பு இருந்து வந்த நிலையில், பாலம் கட்டுவதாலும், சாலை சீர் செய்யும் பணி நடைபெறுவதாலும், குடிநீர் வழங்க முடியவில்லை என்ற மதுரை மாநகராட்சியின் வாதம் ஏற்கத்தக்கதல்ல. மூத்த குடிமக்களான மனுதாரர்கள் குடிநீர் இல்லாமல் எப்படி வசிக்க முடியும் என்பதை மனிதாபிமான கண்ணோட்டத்தில் காண மதுரை மாநகராட்சி பொறியாளர்கள் தவறியுள்ளனர். **மதுரை மாநகராட்சியின் அலுவலர்களின் இம்மாதிரியான அலட்சியமான, மெத்தனபோக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.**

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் குறிப்பாக

பிரிவு: 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rulesன்படி பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மதுரை மாநகராட்சி உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரரின் வீட்டை நேரடியாக ஆய்வு செய்து, குடிநீர் குழாய் உடைப்பினை 15 நாட்களுக்குள் சரி செய்து மனுதாரர்களுக்கு சீரான குடிநீர் வழங்க உரிய போர்கால நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சிக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மனுதாரரின் பழுதுப்பட்ட குடிநீர் இணைப்பை சரி செய்யாமல் 8 மாத காலமாக வயதான மனுதாரர்களை மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கிய மதுரை மாநகராட்சியின் மண்டலம் 2ன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மதுரை மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு குறிப்பாக பாமர மக்கள் வசிக்கும் பகுதிகளில், அவர்களுக்கு சீரான குடிநீர் கிடைக்க உறுதி செய்யும் வகையில் களப் பணியாளர்களை அறிவுறுத்தும் வகையில் அனைத்து மண்டல அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறும் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் குடிநீர் பிரச்சனையை குறித்து காலமுறை கூட்டம் நடத்தி குடிநீர் தேவையினை உடனுக்குடன் நிவர்த்தி செய்யவும், மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்றத்திற்கு 15 தினங்களுக்குள் இம்முறை மன்றத்திற்கு அளிக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 08-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம் //-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருவாளர்கள். D. சிங்காரவேல் மற்றும் D. மனோகர்ராஜ்,
   21-A, கமலா 2வது தெரு, சின்ன சொக்கிகுளம், மதுரை – 625 002.
2. ஆணையர், மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை – 2.
3. உதவி ஆணையர், மண்டலம் - 02, (வடக்கு), மதுரை மாநகராட்சி, மதுரை.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer) நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/7/23

செயலாளர் (முகூபொ)